RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt224s-222914

OPEN ACCESS

# உளவியல் நோக்கில் சங்க மகளிரின் கனவு

**ச. கீதா [அ, *]**

[அ] தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருத்துறைப்பூண்டி-614715, தமிழ்நாடு, இந்தியா.

# The Dream of the Sangam Woman from a Psychological point of view

**S. Geetha [a, *]**

[a] Department of Tamil, Government Arts and Science College, Thiruthuraipoondi-614715, Coimbatore, Tamil Nadu, India

* Corresponding Author: drsgeethabdu@gmail.com

Received: 08-09-2022
Revised: 17-11-2022
Accepted: 24-11-2022
Published: 05-12-2022

Check for updates

**ABSTRACT**

Sangam literary poets are meant to express love and heroism. It does not gave much more importance about women's body descriptions. There are many songs in this literature about the feelings of the hero and the heroine. Heroine waiting for the hero who she loves wholeheartedly is emaciated with longing and becomes leans. She soothes herself with the help of nature. She keeps her love life secretly thinking that if she tells anyone else about her love they might think she is wrong. She longs to meet him and spending everyday like a dead person. Between various protests ahe is passing her life through the night and day signs. The heroine who lived as a queen in her home is spoken as a symbol of culture in her husband's home. She leads a life that makes one wonder from where she got knowledge, morals and the development of selflessness. Waiting for the hero in field, her chastity, duty, feminine etc., are well described in this article. The article shows that women enjoys her inner feelings in dream. From a psychological point of view, the dream reveals the inner feelings of the heroine.

**Keywords:** Sangam Literature, Dream, Heroine, Sangam Women

## முன்னுரை

உளவியல் நோக்கில் காணும்போது தன்னால் நனவாக்கப்பட வேண்டிய விருப்பங்களே கனவாகத் தோன்றுகின்றது, பெரும்பாலும் பெண்காணும் கனவே நடந்தேறுகின்றது. இக்கட்டுரையின் தேடலும் மகளிரின் மனதில் தோன்றும் எண்ணங்கள் மறைமுக நிகழ்வுகளைக் கொண்டு தன்னுணர்வுகளை வெளிப்படுத்தும் போன்றவற்றை ஆராய முற்படுகின்றது.

சங்க இலக்கியப் பாடல்களில் தன் கனவை (தலைவி) தோழியிடம் கூறுகின்றாள். கனவு என்ற சொல் 'சொப்பனம்' என்றும் கூறுவர். தூங்கும் போது உடல் களைப்பாறுகிறது. ஆனால் மனம் எப்பொழுதும் களைப்பாறுவது இல்லை. மூளையின் ஒரு பகுதி இயங்கிக்கொண்டே இருக்கும் என்றும் அதனுள் பலவித தோற்றங்களும் நிகழ்வுகளும் உருவாகின்றன என்றும் அவைதான் கனவாக உருப்பெறுகின்றன என்றும் கூறுவர்.

கற்பனையின் உச்சக்கட்ட நிகழ்வாகக் கனவைக் குறிப்பிடலாம். கற்பனை தோன்றுவதற்கு மன உணர்வுத் தூண்டுதல்களே காரணமாக அமைகின்றன. எல்லை மீறத் துடிப்பது மனம் ஆனால் அவ்எல்லை மீறலை வெளியுலகிற்குக் காட்டாமல் கனவுலகோடு ஒன்றியிருப்பதால் விருப்ப நிறைவு கனவில் நிறைவேற்றம் அடைகிறது.

'காந்தத்தின் திறனைப்' போல் உள்ள உணர்வுகளில் ஏற்படுகின்ற மாற்றங்களை கனவால் ஈர்க்கப்படுகின்றது சங்க இலக்கிய மகளிரின் கனவு உளவியல் நோக்கில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கனவுகளின் மூலங்கள்

கனவு ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருளுடையது என்பது ஃப்ராய்டிய கொள்கையாகும். கனவு ஏதேனும் ஒரு தொடர்பைப் பெற்றிருக்கும் என்றும், இத்தொடர்பின் தூண்டலினால்தான் கனவுகள் பிறக்கின்றன என்றும் கூறுவர். இத்தொடர்பிற்குரிய தூண்டலைக் கனவின் மையப்பொருளாகவும், வாயிலாகவும் கருதுவர்.

உளவியலாளர் கனவின் மூலங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தியுள்ளனர். அ) பழைய நினைவுகள், ஆ) அண்மைக்கால நினைவுகள், இ) வெளியுலக உணர்வுகள், ஈ) உடல் உள் உணர்ச்சிகள்" என்று கனவு மூலங்களை வகைப்படுத்தியுள்ளதை அறியமுடிகிறது. உளவியல் அறிஞர் கூறும் இவ்வகையான மூலங்களை அக இலக்கிய மகளிர் கண்ட கனவுகளோடு பொருத்திப் பார்க்கும் விதமாகப் பின்வரும் விளக்கங்கள் அமைந்துள்ளன (David Sithaya, 1986).

### பழைய நினைவுகள்

பழைய நினைவுகளிலிருந்து கனவுகள் தோன்றுவதாகக் குறிப்பிடுவர். ஆழ்மனதில் புதையுண்ட சிறுபருவ விருப்பங்களே காலங்கடந்து விருப்ப நிறைவை அடைகின்றன. ஆதலால் சில நிகழ்வுகள் நன்றாக நினைவில் பதிந்திருக்கும். சில நிகழ்வுகளில் உணர்ந்த உணர்வுகள் மட்டுமே பதிவாகியிருக்கும். சிரிப்பு, அழுகை, துயரம், வருத்தம், ஏமாற்றம் போன்ற உணர்வுகளை மட்டுமே நினைவில் வைத்திருப்பர். அனைத்து நிகழ்வுகளையும் நினைவு வைத்திருப்பதில்லை. மனத்தைப் பாதித்த இன்ப துன்ப நினைவுகள் மட்டுமே பதிவாகியிருக்கும்.

"கனவுகளை இறந்த காலத்தில் எதிரொலியாக ஃப்ராய்ட் என்பர். கனவுப் படிமங்கள் மெய்ம்மைக்குப் புறம்பாக இருந்தாலும் அவை உள அர்த்தமுள்ளவை. ஒரு கனவு குறித்து நிற்கின்ற பொருண்மைகள் கடந்தகால நிகழ்வின் எதிரொளியாகத் தெரிகின்றன. எனவே கனவு வெளிப்பாடுகளை நிகழ் காலத்தோடு தொடர்புடைய இறந்தகால அனுபவங்களின் பட்டொளிகளாக ஃப்ராய்ட் காண்கிறார்"2

பழைய கனவு என்பதற்குக் கழிந்துபோன இறந்த காலத்தை நினைந்து இரங்கிய இரக்கத்தால் ஏற்பட்ட கற்பனை அல்லது வாழ்விலிருந்து பின்னோக்கிச் சென்ற கனவு என்று திறனாய்வாளர்கள் பொருள் கொள்வர் (Ravichandran, 2007).

"விளையாடு ஆயமொடு வெண் மணல் அழுத்தி,

மறந்தனம் துறந்த காழ் முளை அகைய,

'நெய் பெய் தீம் பால் பெய்து இனிது வளர்த்தது;

நும்மினும் சிறந்தது நுவை ஆகும்" (Parimanam & Balasubramaniyam, 2004)

தங்களுடன் விளையாடுகின்ற தோழியர் கூட்டத்துடன் சென்று முன்பொரு நாள் ஒரு புன்னை விதையை மணலுள் அழுத்தி விளையாடிய பின் அதனை மறந்து திரும்பினர். அவ்விதை வேரூன்றி முளைத்து மரமாகியது. அதனைக் கண்டு மகிழ்ந்த தோழியர் நெய்யோடு கலந்த இனிய பாலை நீராக ஊற்றி வளர்த்தனர். அச்செயல் கண்ட அன்னை, புன்னை உங்களைவிடச் (தோழியர்) சிறந்தது; அது உங்களோடு பிறந்த தங்கையாகும் தகுதியுடையது என்று கூறினாள். இப்பழைய நினைவு தலைவியின் களவு வாழ்வில் நினைவுகூறத்தக்கதாக அமைகின்றது. தன் காதலைத் தங்கையாகிய புன்னை நிழலில் நின்று மகிழ நாணுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

இறந்த கால அனுபவங்கள் மீண்டும் நினைத்துப் பார்க்கும் வகையில் அமைந்துள்ளமையை இப்பாடலால் உணரமுடிகிறது.

## அண்மைக்கால நினைவுகள்

அண்மைக்கால நினைவுகள், கனவுகள் தோன்றக் காரணமாகின்றன. முந்தைய அனுபவங்களிலிருந்து பெறப்பட்ட நினைவுகள் கனவுகளாகத் தோன்ற வாய்ப்பிருக்கின்றன.

"அண்மை நிகழ்வுகள் தொடர்புடையவை என்றாலும் அவை அப்படியே வெளிப்படாமல் அவற்றைப் போன்ற கொஞ்சம் பழைய நிகழ்வுகளும் எண்ணப் பதிவுகளும் சேர்ந்து வெளிப்படுகின்ற சுனவாகும். எந்த ஒரு நிகழ்வும் தனித்தன்மை வாய்ந்தது என்று சொல்லுவதற்கு இல்லை. அந்நிகழ்வோடு இயைந்த நிகழ்வுகள் வேறு வடிவங்களில் வேறு காலக்கட்டங்களில் நிகழ்ந்திருக்கலாம். அவை அனைத்தும் மனத்தில் நினைவுருக்களாக இருக்கின்ற பட்சத்தில் அண்மை நிகழ்வு இயைபுடைய நினைவுகளை வெளிக்கொண்டுவர, பழைய வெளிப்படுவதுண்டு. இவ்விதக் கனவில் ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்வுகள்இணைந்திருப்பதால் இருண்மையை ஏற்படுத்துகிறது." (Ravichandran, 2007).

மின் அவிர் வயங்கு இழை ஞெகிழச் சாஅய்,

நன்னுதல் பசத்தல் யாவது?-துன்னிக்

கனவில் காணும் இவளே

நனவில் காணாள், நின் மார்பே தெய்யோ!" (Avvai Duraisamy Pillai, 1957)

தலைவன் தலைவியை நாள்தோறும் கண்டு மகிழ்கிறான். ஆனாலும் தலைவி வருத்தமுறுவதைக் கண்ட தலைவன், தலைவியின் மேனிப்பசத்தலுக்குக் காரணம் வினவுவதற்குத் தோழி தலைவியின் கனவைப் பற்றி விளக்கும் விதமாக இப்பாடல் அமைந்துள்ளது.

தலைவி கனவில் தலைவனைக் கூடி இன்புறுகிறாள். கண்விழித்தபோது தலைவனைக் காணவில்லை. கனவில் கண்ட இன்ப நிகழ்வு நிலையற்றதாகி அவள் விழித்தவுடன் தலைவன் மறைந்துவிடுவதால் மேனிப் பசலையூர்ந்து காணப்படுகிறது. இக்கனவின் விளைவால் தலைவி பகலும் இரவும் தலைவனுடன் இருத்தலையே விரும்புகிறாள் என்பதை அறியமுடிகிறது. இக்கனவு அண்மைக்கால (நேர இடைவெளி) நினைவுகளை எண்ணி வருந்துவதை உணர்த்துகிறது.

## வெளியுலக உணர்வுகள்

தூங்கும்போது சில நேரங்களில் தன்னைப் பற்றியே கனவுகள் தோன்றும். சில நேரங்களில் புற உலகில் காணப்படும் நிகழ்வுகளை மையப்படுத்தி கனவுகள் தோன்றும். இவ்வகையான கனவு, வெளியுலக உணர்வுகளால் ஏற்படும் தூண்டல் நிகழ்வாகும். வெளியுலக உணர்வுகளை உணர்த்தும் வகையில் பின்வரும் விளக்கம் அமைந்துள்ளது.

"வேறு சில கனவுகளில் நாம் தூங்கும்போதைய வெளியுலக உணர்ச்சிகள் பிரதிபலிக்கும். குளிர், வெப்பம், ஓடும் நீரின் ஓசை, கடிகாரத்தின் மணி ஒலி, அதிக ஒளியின் உணர்வு இவைகளை உடல் உணர்வதால் மனம் கனவாகக் கண்டுகொள்கிறது." உணர்வுகளை உடல் உணர்ந்து மனம் அவற்றைக் கனவாக்கிக் கொள்வதால் மனிதன் புறஉலகை உணர்ந்து கொண்டதை அறியமுடிகிறது (David Sithaya, 1986).

"செல்வச் சிறாஅர் சீறடிப் பொலிந்த

தவளை வாய பொலம்செய் கிண்கிணிக்

காசின் அன்னபோது ஈன் கொன்றை

குருந்தொடு அலம்வரும் பெருந்தண் காலையும்,

'கார் அன்று' என்றி ஆயின்,

கனவோ மற்றது இது? வினவுதல் யானே" (Nagarajan, 2004)

பருவம் கண்டு மயங்கிய தலைமகளைத் தோழி இது 'கார்ப்பருவம்' அன்று என விளக்குகின்றாள். அதற்குத் தலைவி விடைதரும் விதமாக இப்பாடல் அமைந்துள்ளது.

கொன்றையின் முகைகளையும் குருந்தின் முகைகளையும் கண்டு மழை பெய்யும் காலம் என்று அறிந்து கார்காலம் வந்துவிட்டது என்று கூறுகிறாள். அதற்குத் தோழி பருவம் அன்று என விளக்குகின்றாள். அவ்வாறு பருவம் இன்னும் வரவில்லை என்றால் நான் (தலைவி) காண்பது கனவா என்று வினவுகின்றாள். புற உலக உணர்வைத் தலைவி உணர்ந்து கொள்ளும்விதம் இப்பாடலில் விளக்கப்பட்டுள்ளது.

## உடல் உள் உணர்ச்சிகள்

உடல் உள் உணர்ச்சிகளுக்குத் தொடர்புடைய நிகழ்வுகள் கனவாக வெளிப்படும் என்பர். உணர்ச்சிகளுக்குத் தன் விருப்ப வடிவம் கொடுத்துஅவ்வாறே நிறைவேற்றிக் கொள்ளும் நிலையைக் காணமுடிகிறது. உணர்ச்சிகளின் தூண்டல்களுக்கு ஏற்றாற்போல் கனவுகள் தோன்றுகின்றன.

"உணர்ச்சியோடு தொடர்புடைய நிகழ்வு(கள்) கனவாக வெளிப்படும். சான்றாகப் பகலில் நடந்த நிகழ்வு கனவில் தொடர்வதைக் கூறலாம். குறிப்பிட்ட நபர் மீதான பாலியல் வேட்கை அப்படியே கனவில் வெளிப்படுவதுண்டு. இவ்விதக் கனவுகள் வெளிப்படையானவை. பகுப்பாய்வு செய்ய வேண்டிய தேவையில்லை. இத்தகு கனவின் பொருண்மையைக் கனவாளனே உணர்ந்து கொள்ள முடியும்."

“புனவேங்கைத் தாது உறைக்கும் பொன்அறை முன்றில்

நனவில் புணர்ச்சி நடக்குமாம் அன்றோ?

நனவில் புணர்ச்சி நடக்கலும், ஆங்கே

கனவில் புணர்ச்சி கடிதுமாம் அன்றோ?” (Rasamaanikkanar, 2011)

தலைவன்- தலைவி களவொழுக்கத்தில் தலைவியின் தந்தை தமையர் முதலானோர் திருமணத்திற்கு மறுப்புக்கூறிய நிலையில் தோழி அறத்தொடு திருமணத்திற்கு நிற்க, இறுதியில் திருமணத்திற்கு உடன்படுகின்றனர். உடன்பட்ட செய்தியைத் தோழி, தலைவிக்கு உரைக்கின்றாள். அவ் உரையைக் கேட்ட தலைவி புனத்தில் நிற்கும் வேங்கைப் பூவின் தாது வீழ்ந்து பொன்னிறமாகக் காட்சி தரும் முற்றத்தில் நனவாகவே தலைவனுடன் தன்னைச் சேர்த்து வைக்கும் நிகழ்ச்சி நடைபெறும். அவ் ஒப்பற்ற நனவிற் புணர்ச்சி நடந்ததும், கனவில் சேர்ந்து உறவாடும் எண்ணத்தை விட்டுவிடுகின்றேன் என்று 'கனவில் சேர்ந்து உறவாடிய' உணர்ச்சிகளை வெளிப்படுத்துகிறாள்.

## முடிவுரை

சங்க இலக்கியங்களில் புலவர்கள் தமது உணர்வுகளைப் புலப்படுத்தவதற்குத் தனித்துவமான ஒரு மொழிநிலையைக் கையாண்டுள்ளனர் உணர்வுகளின் வெளிப்பாடுகள் உரையாடல்களாகவோ தனக்குத்தானே கூறிக்கொள்வனவாகவோ அமைந்தாலும் மன உணர்வுகள் வலுப்பெற்றுள்ளன. அவை கனவுகளாக வெளிபடாத நிலையில் நோய்வாய்ப்படும் சூழலுக்குத் தள்ளப்பட்டிருப்பார்கள், அவ்வகையில் தன் மாந்தர்களை புலவர்கள் கனவால் மனநிறைவு அடைய வைத்து மன உணர்வுகளை மகிழ்ச்சியான கட்டுக்குள் வைத்திருப்பது இன்ப நிகழ்வுகளாகும். அக இலக்கியங்கள் முழுவதும் உளவியல் சிந்தனை வேரூன்றி படர்ந்துள்ளதை அறிய முடிகிறது. மனதில் ஏற்பட்ட புறஉலக இயல்யான விருபங்களை அடக்கி வைக்கும் போது உடலும் உள்ளமும் கெடுகிறது, கனவால் ஆசைகள் நிறைவேற்றப்படுகின்றன. ஆதலால் தான் அறிஞர் அப்துல் கலாம் அவர்கள் கனவுகாணச் சொல்லியிருப்பார்கள் போல் எண்ணத்தோன்றுகிறது, எந்த இலட்சியத்தை அடைய விடா முயற்சி செய்தாலும் ஒருநாள் வெற்றி கிடைத்தே தீரும். இக்கட்டுரையில் ஓரிரு பாடல்களை மட்டுமே உட்படுத்தியிருப்பதால் இதே போன்ற மற்ற பாடல்களின் கருத்துக்களும் இந்நிகழ்வை அடியொற்றி

காணப்படும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை என்பது தெளிவாகின்றது. மனதை எதிர்மறை எண்ணங்கள் ஆட்கொள்ளாமல் இருப்பதற்கு கனவு ஊன்றுகோளாகிறது.

## References

Avvai Duraisamy Pillai, (1957) Ainkurunuru Source and Descriptive Text, Annamalai University, Chidambaram, India.

David Sithaya, (1986) Manosakthiyum Manitha Sakthiyum, Marudhui Press, Chennai, India.

Nagarajan, V. (2004) Kurunthokai, New Century Book House (P) Ltd, Chennai, India.

Parimanam, A.M., Balasubramaniyam, K.V., (2004) Natrinai, New Century Book House Pvt Ltd, Chennai, India.

Rasamaanikkanar, M. (2011) Kaliththogai, Poombukar Publication, Chennai, India

Ravichandran, T.K. (2007) Sigmund Freud Ulappaguppaaivu Ariviyal, Alaigal Pathippagam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License